# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இந்தியாவில் நடைபெற்ற 2025 BIMSTEC இளைஞர் மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை பிரதி அமைச்சர் தலைமையிலான பேராளர்கள்</u>**

### பிராந்தியத்தில் இளைஞர்கள் மத்தியிலான ஒத்துழைப்பினை வலுவாக்குவதில் முக்கியத்துவமிக்க நகர்வு

உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் கௌரவ சுனில் குமார கமகே அவர்களை இந்திய இல்லத்தில் இன்று சந்தித்தார். BIMSTEC இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த இலங்கை பிரதிநிதிகளுக்கு தலைமைதாங்கிய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை பிரதி அமைச்சர் கௌரவ எரங்க குணசேகர அவர்களும் இந்தச் சந்திப்பின்போது கௌரவ அமைச்சர் அவர்களுடன் இணைந்திருந்தார். இந்திய அரசாங்கத்தின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு இந்த மாநாட்டினை ஒழுங்கமைத்திருந்தது. குஜராத்தின் காந்திநகரில் உள்ள மகாத்மா காந்தி மாநாட்டு மையத்தில் 2025 பெப்ரவரி 07 முதல் 11 ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெற்றிருந்தது.

2. BIMSTEC இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த இலங்கை பேராளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இளைஞர் வலுவூட்டல் திட்டங்கள் குறித்த பல்வேறு முன்னெடுப்புகளை பகிர்ந்துகொண்டிருந்தனர். V4R நிகழ்ச்சித் திட்டம், இளைஞர்களுக்கான பல் நோக்கு நிலையங்கள், தகவல் தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் தொழில் கல்வி திட்டங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் உள்ளிட்டவை இதில் உள்ளடங்கியிருந்தன.

3. இம்மாநாட்டின் அங்கமாக இந்தியாவின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மண்டவியா அவர்கள் பிரதி அமைச்சர் கௌரவ எரங்க குணசேகர அவர்களைச் சந்தித்திருந்தார். கல்வி, தொழில்நுட்பம், தொழில்முயற்சியாண்மை, விளையாட்டு மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இளைஞர் பரிமாற்றத் திட்டங்கள் மூலம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன் 'Viksit Bharat" மற்றும் "My Bharat" ஆகியவற்றின் அடிப்படையிலான இந்திய இளைஞர் சமுதாயத்தினரின் முயற்சிகளிலிருந்து பல விடயங்களைக் கற்றுக்கொள்வதில் இலங்கை தரப்பினர் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

4. இந்த மாநாடு BIMSTEC உறுப்பு நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியவற்றைச் சேர்ந்த இளம் தலைவர்களை ஒன்றிணைத்தது. 'BIMSTEC நாடுகளிடையிலான பரிமாற்றத்திற்கான பாலமாக இளைஞர்கள்' என்ற தொனிப்பொருளில், பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் இளைஞர்கள் தலைமையிலான முன்முயற்சிகளின் பரிமாற்றத்தை எளிதாக்குவதற்கும் பிரதிநிதிகளுக்கு ஓர் உற்சாகமான தளத்தை வழங்கியது. இவ்வாறான அமர்வுகளுக்கு மேலதிகமாக இந்தியாவின் செழிப்பான வரலாறு, புதுமை மற்றும் ஸ்திரமான வளர்ச்சிக்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய கலாசார அனுபவங்களைப் பெறுவதற்கான நிகழ்வுகள் மற்றும் கள விஜயங்களிலும் இப்பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

********

**கொழும்பு**
**27 பெப்ரவரி 2025**